**செய்தி வெளியீடு எண்: 843** **நாள்: 16.11.2018**

## செய்தி வெளியீடு

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் இன்று (16.11.2018), நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி, ஆற்றிய உரை:</u>**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தமிழ்நாட்டில் 102.66 இலட்சம் பயனடையும் வகையில் 55 குடிநீர் வழங்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தேசிய ஊரக குடிநீர் திட்டத்திற்கான ஒதுக்கீட்டை மத்திய அரசு குறைத்துள்ளபோதிலும் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் ஊரகப் பகுதியில் குடிநீர் வழங்கும் திட்டங்களை மாநில அரசால் தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருச்செங்கோடு கூட்டுக் குடிநீர் திட்டம் 17.09.2017 அன்று நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ற அறிவிப்பு என்னால் அறிவிக்கப்பட்டது. சொன்னதை செய்வோம் என்று சொல்லும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு உடனடியாக 05.03.2018 அன்று இக்கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ரூபாய் 399.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்திற்கு நிதி ஆதாரங்கள் மற்றும் ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு பணி உத்தரவு 16.8.2018–ல் வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் காவிரி ஆற்றின் ஊராட்சிக்கோட்டை கதவணைக்கு மேற்புறத்தில் தேவையான குடிநீர் பெறப்பட்டு அல்லக்காபாளையத்தில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நீர் நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு 741 மேல்நிலை நீர்த் தொட்டிகள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர்

வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலமாக திருச்செங்கோடு ஒன்றியத்தில் 26 ஊராட்சிகளுக்கு உட்பட்ட 345 கிராமங்களில் உள்ள 2,52,963 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 13.96 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவிருக்கிறது. பள்ளிபாளையம் ஒன்றித்தின் 15 ஊராட்சிகளுக்கு உட்பட்ட 324 கிராமங்களில் உள்ள 2,94,375 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 5.57 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவிருக்கிறது. ஆலாம்பாளையம் பேரூராட்சியில் உள்ள 50,420 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 4.54 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவிருக்கிறது. படவீடு பேரூராட்சியில் உள்ள 15,028 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 1.35 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவிருக்கிறது. சேலம் மாவட்டம், சங்ககிரி பேரூராட்சியில் உள்ள 48,363 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 4.35 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவிருக்கிறது. இத்திட்டம் முடிவுறும்போது மொத்தம் 6,61,000 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 32.65 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். ரூபாய் 37 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருச்செங்கோடு நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் 1 லட்சத்து 50 ஆயிரம் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 18.12 மில்லியன் லிட்டர் அளவிற்கு குடிநீர் வழங்கும் வகையில் செயல்படுத்த 23.08.2018–ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 486 கோடி மதிப்பீட்டில் 7 இலட்சத்து 11 ஆயிரம் மக்களுக்கு 50.77 மில்லியன் லிட்டர் அளவிற்கு குடிநீர் வழங்க வேண்டுமென்று இரு திட்டங்களுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் விரைவுபடுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப் படவுள்ளது.

கடந்த 2011–ஆம் ஆண்டு முதல் 2018–ஆம் ஆண்டு வரை 7 ஆண்டுகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நாமக்கல் மாவட்டத்தில் 58.64 கோடி மதிப்பீட்டில் 2.2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 6 குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் 1 பாலாறு சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு பயனில் உள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் ரூபாய் 185 கோடியே 24 இலட்சம் மதிப்பீட்டில் நாமக்கல் நகராட்சிக்கென குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மற்றும் ரூபாய் 55 கோடியே 42 இலட்சம் மதிப்பீட்டில் ராசிபுரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்கள் தற்போது செயலாக்கத்தில் உள்ளன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மட்டுமன்றி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மூலமாகவும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டங்கள் மாண்புமிகு அம்மாவின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மக்கள் யாரும் குடிநீருக்கு கஷ்டப்படக் கூடாது என்ற மாண்புமிகு அம்மாவின் உயரிய சிந்தனையின் அடிப்படையில் குடிநீர் திட்டங்கள் மாண்புமிகு அம்மாவின் அரசால் நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்று சொன்னால், அது மிகையாகாது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலே எண்ணற்ற திட்டங்களை நாம் நிறைவேற்றித் தந்திருக்கிறோம். பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் வீணாகாமல் இருப்பதற்காக அம்மாவினுடைய அரசு ஒரு நீண்டகால திட்டத்தை வகுத்து, திட்டங்கள் தீட்டி, முதற்கட்டமாக குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை வகுத்து, அதற்காக 1519 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தத் திட்டம் வெற்றி கண்டது. விவசாயப் பெருங்குடிமக்களும், பொதுமக்களும்

குடிமராமத்து திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும் என்று கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், மேலும் இந்த ஆண்டு **1511** ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, அதற்காக **328** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. பெய்கின்ற மழைநீரை ஆங்காங்கே உள்ள ஏரிகள், குளங்களில் சேமித்து வைக்கப்படவேண்டும். ஏற்கனவே இருக்கின்ற ஏரிகளை ஆழப்படுத்தாத காரணத்தினால், ஏரிகளில் வண்டல்மண் தேங்கி மேடாகிவிட்ட காரணத்தினால், மழைநீர் வீணாகிறது. இதைத் தடுப்பதற்காக, ஏரிகள், குளங்களிலுள்ள வண்டல்மண்ணை விவசாயிகள் இலவசமாக அள்ளிக் கொள்ளலாம் என்று அறிவித்ததன் அடிப்படையில், விவசாயிகள் ஏரிகள், குளங்களிலுள்ள வண்டல்மண்ணை தங்களது நிலங்களுக்கு இயற்கை உரமாக பயன்படுத்துகிறார்கள். இந்தத் திட்டத்தை விவசாயிகள் சங்கத்தின் மூலமாக நிதியை கொடுத்து, விவசாயிகளே அந்த குடிமராமத்துப் பணிகளை செய்கின்றார்கள். இதன்மூலம் ஏரிகள், குளங்கள் ஆழமாகின்றது மற்றும் பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமித்து வைக்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தை தமிழகத்திலே அம்மாவின் அரசு தான் கொண்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓடைகள், நதிகளின் குறுக்கே தடுப்பணை கட்டவேண்டும் என்று கோரிக்கையின் அடிப்படையில், மூன்றாண்டு திட்டமாக இந்தத் திட்டத்திற்காக **1000** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, முதல் கட்டமாக இந்த ஆண்டு அந்தப் பணிகளை துவங்கியிருக்கின்றோம். பருவகாலகளில் பெய்கின்ற மழைநீர் வீணாகாமல் இருக்க ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டி, நிலத்தடி நீரை உயரச் செய்து, மக்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், நதிகளின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டிருக்கின்றோம். கரூர் மாவட்டத்தில் ஒரு புதிய தடுப்பணை சுமார் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் 1 டிஎம்சி தண்ணீர் தேக்கப்படும். இதனால், அங்கிருக்கின்ற பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் குடிநீர் கிடைப்பதற்கு இது பேருதவியாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக 2011–லிருந்து 2016 வரை மாண்புமிகு அம்மா அமைச்சரவையில் இருந்தபொழுது, இங்கு இருக்கின்ற எல்லா சாலைகளையும் விரிவுபடுத்தவேண்டும் என்று வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில், திருச்செங்கோட்டிலிருந்து பரமத்திவேலூர், திருச்செங்கோட்டிலிருந்து நாமக்கல், திருச்செங்கோட்டிலிருந்து ராசிபுரம், வள்ளிக்கரை, திருச்செங்கோட்டிலிருந்து ஓமலூர் வரை நான்கு வழிச்சாலை அமைப்பதற்கு அம்மா அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. திருச்செங்கோட்டிலிருந்து ஈரோடு வரை நான்கு வழிச்சாலை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, திருச்செங்கோட்டுக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஒருசிலர், நீதிமன்றத்திற்கு சென்ற காரணத்தினாலே அந்தப்பணி தடைபட்டிருக்கின்றது. நீதிமன்றம் மூலமாக அதை சரிசெய்து, திருச்செங்கோடு நகரத்திற்கு புறவழிச்சாலை அமைக்கின்ற பணியும் மேற்கொள்ளப்படும். அதோடு, ராசிபுரத்தில் புறவழிச்சாலை அமைக்கப்பட்டிருக்கின்றது. எஞ்சிய புறவழிச்சாலைகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நாமக்கல் நகரத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. அங்கேயும் புறவழிச்சாலை

அமைப்பதற்கு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. என்னென்னவெல்லாம் கேட்டீர்களோ, அத்தனையையும் அம்மாவினுடைய அரசு செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நாமக்கல்லில் இருந்து திருச்சி வரை உள்ள சாலையை அகலப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில், அதையும் அம்மாவின் அரசு செயல்படுத்துவதற்கு திட்டம் தீட்டப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அனுமதியும் கிடைத்துள்ளது. மேலும், நாமக்கல்லில் இருந்து துறையூர் வரை சாலையை விரிவுபடுத்த வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அந்த சாலையையும் விரிவுபடுத்துவதும், அம்மா அரசின் ஆய்வில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, நாமக்கல் மாவட்டத்தில் இருக்கின்ற அத்தனை சாலைகளையும் விரிவுபடுத்துகின்ற பணியை அம்மாவின் அரசு எடுத்து வருகிறது. மேலும் பல சாலைகளையும் அம்மாவின் அரசு புதுப்பித்து, சீரமைத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு அம்மாவினுடைய அரசு பதவியேற்ற பிறகு, கல்வியிலே ஒரு புரட்சி மறுமலர்ச்சி ஏற்படுத்தியிருக்கிறது. 2011–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் பதவி ஏற்றபொழுது உயர்கல்வி படிக்கக்கூடியவர்கள் எண்ணிக்கை 100க்கு 21 சதவீதமாக இருந்தது, அம்மா அவர்கள் கல்வியில் செய்த புரட்சி, உதவிகள் வாயிலாக இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசில் 100க்கு 46.8 சதவீதம் உயர்கல்வி படிக்கின்றார்கள். இவை கல்வியில் செய்த புரட்சி, மறுமலர்ச்சி.

மருத்துவத் துறையில், அகில இந்திய அளவில் தொடர்ந்து மூன்று ஆண்டு காலமாக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் முதலிடத்தில் இருக்கின்றோம். அரசாங்க மருத்துவமனையில் தனியார் மருத்துவவனைக்கு இணையாக அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கின்றோம். இரண்டு கைகளையும் இழந்த ஒருவருக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மூலம் இரண்டு கைகளையும் பொருத்தி, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நமது அரசு மருத்துவமனையில் நமது மருத்துவர்கள் சாதனை செய்திருக்கிறார்கள். மாற்று அறுவை சிகிச்சை மூலமாக சீறுநீரகம் மாற்று அறுவை சிகிச்சை, இதய ஆபரேசன் செய்கின்றோம். அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அம்மாவினுடைய அரசு, பிறக்கின்ற குழந்தையின் இறப்பு சதவீதத்தை குறைத்திருக்கின்றது, தொடர்ந்து இதை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதுபோல் பிரசவம் பார்க்கின்ற தாய்மார்களின் இறப்பு குறைக்கப்பட்டிருக்கிறது. அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்தபடி கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூபாய் **6000–**லிருந்து ரூபாய் **12,000** ஆயிரம் கொடுத்தார்கள், **2016–**ல் ரூபாய் **12,000–**லிருந்து ரூபாய் **18,000** கொடுத்தோம். அம்மா அவர்கள், வேலைக்கு செல்கின்ற பெண்கள் உரிய நேரத்தில் பணிக்குச் சென்று வீடு திரும்ப வேண்டுமென்று இருசக்கர வாகனம் கொடுக்கப்படும் என்று சொன்னதை, அம்மா அரசு நடைமுறைப்படுத்தி காட்டியிருக்கிறது. சொன்னதை செய்து சாதித்துக் கொண்டிருக்கிறது அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையில், இந்தியாவிலேயே அதிக அளவு உணவு தானிய உற்பத்தியை பெருக்கி, கிருஷ் கர்மாண் என்ற உயரிய விருதை நாம் தொடர்ந்து பெற்றுக்

கொண்டிருக்கின்றோம். இத்தனை சாதனைப் பட்டியலும் அம்மாவினுயைை அரசில் தான் கிடைத்திருக்கிறது, வேறு எந்த ஆட்சியிலும் இல்லை.

புதிய, புதிய கல்லூரிகளை திறந்திருக்கின்றோம். இதனால் ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வி படிக்கக்கூடிய சதவீதம் உயர்ந்திருக்கிறது.

இந்தியாவில், மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, சட்டம்–ஒழுங்கு சிறப்பாக செயல்பட்டு குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது. எல்லா நகரங்களிலும், மாநகராட்சிப் பகுதிகளில் இன்றைக்கு சிசிடிவி கேமராக்கள் வைத்திருக்கின்றோம். இத்திட்டத்தை அனைத்து நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்த உள்ளோம். குற்றவாளிகளின் எண்ணிக்கையை குறைக்கும் விதமாக அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு திட்டங்களையும் மாண்புமிகு அம்மாவின் அரசு மக்களுக்கு வாரி, வாரி வழங்கிக் கொண்டிருப்பது எதிர்க்கட்சிகளின் கண்ணிற்குத் தெரியவில்லை. இன்றைக்குக் கூட நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் தெளிவாக சொன்னதைப்போல,. இந்தப் புயல் வந்தால் எப்படி தாக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்ததன் அடிப்படையில், அம்மாவினுடைய அரசு 5 முறை வடகிழக்குப் பருவ மழையை எதிர்கொள்வது எப்படி என்று ஆய்வுக் கூட்டம் நடத்தில், அந்த ஆய்வுக் கூட்டத்திலே மாண்புமிகு துணை முதலமைச்சர், மூத்த அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது குறித்து தகுந்த

ஆலோசனைகள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயல்பட்டதன் காரணமாக பாதிப்பு குறைக்கப்பட்டுள்ளது. கஜா புயல் நேற்று நள்ளிரவில் கிட்டத்தட்ட 111 கிலோமீட்டர் வேகத்தில் அடித்திருக்கிறது. அவ்வளவு வேகமாக புயல் வீசிய காரணத்தினால், கடலோர மாவட்டங்களான நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் செய்ய வேண்டுமென்று நிவாரணப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தப் புயல் வருவதற்கு முன்பாகவே, மூத்த இந்திய ஆட்சிப் பணியாளர்களை 6 கடலோர மாவட்டங்களுக்கும் அனுப்பி, பணிகள் செய்த காரணத்தினால்தான் பாதிப்பு குறைந்திருக்கிறது. புயல் வருவதற்கு முன்பாகவே தாழ்வான பகுதிகளிலும், குடிசைப் பகுதிகளிலும் வசித்துவந்த சுமார் 82,000 மக்களை 471 முகாம்களில் தங்க வைத்தது முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்ததன் காரணமாக இன்றைக்கு பாதிப்புகள் குறைக்கப்பட்டு, மக்கள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றார்கள். கஜா புயலினால், சாய்ந்துள்ள அதிகமான மின்கம்பங்களும், ஒடிந்து விழுந்த மரங்களும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 27 ஆயிரம் மின்கம்பங்கள் சாய்ந்துள்ளதாக தகவல் தருகின்றார்கள், இன்னும் முழுமையாக கணக்கிடப்படவில்லை. 105 துணை மின்நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கு கூறுகின்றார்கள். இவ்வளவு பணிகளும் துரிதமாக, போர்க்கால அடிப்படையில் செய்து அந்த மக்களுக்கு தேவையான மின்சார வசதியை அம்மாவினுடைய அரசு செய்து கொடுக்கும்.

மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு அமைச்சர்களை அனுப்பியிருக்கின்றோம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் தங்கமணி அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் வேலுமணி அவர்களும், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அண்ணன் திண்டுக்கல் சீனிவாசன் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் சகோதரர் உதயகுமார் அவர்களும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அண்ணன் ஜெயக்குமார் அவர்களும் நாளைய தினம் கடலோட மாவட்டங்களுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறி தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். புயல் வருவதற்கு முன்பாகவே வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் கட்டுப்பாட்டு அறையிலே நேற்று இரவு முழுவதும் விழித்திருந்து கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் தொடர்பு கொண்டு, அங்கிருக்கக்கூடிய நிலவரங்களை கேட்டறிந்து, ஒவ்வொரு மணிநேரமும் நடப்பதை எனக்கு தகவல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதிகாலை 2.30 மணிக்கு புயல் அடித்தது, 4 மணிக்கு அங்கு நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. எந்த ஆட்சியில் நடந்தது? புயல் வருவதற்கு முன்பாகவே அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் அங்கேயிருந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அமைச்சர்களை கேட்டுக் கொண்டதற்கிணங்க, நாகை மாவட்டத்தில் அண்ணன் ஓ.எஸ்.மணியன் அவர்களும், திருவாரூர் மாவட்டத்தில் சகோதரர் காமராஜ் அவர்களும், புதுக்கோட்டையில் மாண்புமிகு அமைச்சர் சென்னை கட்டுப்பாட்டு அறையிலிருந்தும், தஞ்சாவூர் மாவட்டத்தில் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் மாண்புமிகு

அமைச்சர் மணிகண்டன் அவர்களும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர். எந்தக் காலத்திற்கும் மக்களுக்கு துன்பம் ஏற்பட்டால் உடனடியாக அந்தத் துன்பத்திலிருந்து விடுவிக்கக்கூடிய ஒரே அரசு, அது அம்மாவினுடைய அரசாகத்தான் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான ஆறுதலை தெரிவித்து, படுகாயமடைந்த, உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கும் ஆறுதலைச் சொல்லி, அவர்களுக்கு தேவையான நிதியுதவியையும் அளிப்பதற்கு இருக்கின்றோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் அதை எதிர்கொள்கின்ற அளவிற்கு அம்மாவினுடைய அரசு முன்கூட்டியே நடவடிக்கை எடுத்து மக்களை பாதுகாக்கின்ற அரசாகத் திகழுமென்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மிகச் சிறப்பாக, எழுச்சியாக, குறுகிய காலத்திலே இந்த கூட்டுக் குடிநீர் திட்டம் அடிக்கல் நாட்டு விழாவை ஏற்பாடு செய்த மாண்புமிகு அமைச்சர் சகோதரர் தங்கமணி அவர்களுக்கும், நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி.

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**